செய்தி வெளியீடு எண்: 323 நாள் : 5.07.2016

## செய்தி வெளியீடு

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி,

108 வைணவ திருத்தலங்களில் ஒன்றானதும், புராதானமிக்க அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ யோகநரசிம்மர், ஸ்ரீ வரதராஜசுவாமி, திருமழிசையாழ்வார், கருடாழ்வார் மற்றும் குளக்கரை ஆஞ்சநேயர் ஆகிய சன்னதிகளுக்கும், அதன் விமானங்களுக்கும், பின்கோபுர வாசல் விமானம், பாண்டி கோபுரம், நரசிம்மர் கல்யாணமண்டபம், நரசிம்மர் மண்டபத்தின் மேல்தளம், கீழ்தளங்கள், குளக்கரை ஆஞ்சநேயர் விமானம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2005ஆம் ஆண்டில் மஹாசம்ரோக்ஷணம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தற்போது மஹாசம்ரோக்ஷணம் நடைபெறுவதன் தொடக்கமாக, இத்திருக்கோயிலில் துன்முகி வருடம் ஆனி மாதம் 26ம் தேதி (10.07.2016) அன்று பாலாலயம் நடைபெறவுள்ளது. இதற்கான திருப்பணிகள் சுமார் ரூ. ஒரு கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திருப்பணிகள் பழமை மாறாமல் தொல்லியல் துறை வல்லுநர்களின் ஆலோசனைப்படி சிறப்பாக செயல்படுத்தப்படும்.

மேலும் ரூ.55 இலட்சம் மதிப்பில் சுவாமி தங்கக் கிரீடம், கர்ணபத்திரம், ஸ்ரீசடகோபன் மற்றும் கவசங்கள் ஆகியவற்றிற்கான தங்கத் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேற்கண்ட திருப்பணிகள் குறித்து இன்று (05.07.2016) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முகமணி அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் நடைபெற்று வரும் ஏற்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ யோகநரசிம்மர், ஸ்ரீ வரதராஜசுவாமி, திருமழிசையாழ்வார், கருடாழ்வார் மற்றும் குளக்கரை ஆஞ்சநேயர் ஆகிய சன்னதிகளுக்கும், அதன் விமானங்களுக்கும், திருப்பணிகள் நடைபெற்று வருவதையும், யாகசாலைக்கான முன்னேற்பாடு பணிகளையும் இன்று (05.07.2016) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர், திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முகமணி அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் நடைபெற்று வரும் ஏற்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**